بسـم الله الـرحمن الـرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 1:9, ஜமாதுல் ஆகிர், ஹிஜ்ரி 1426, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, e-mail : suvanam@gmail.com

# ஒளி படைத்த கண்ணினாய்

டாக்டர் A. ஷேக் அலாவுதீன் MD, (Alt. Med) ATCM (CHINA)

விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலம் அமைத்து 0.002 நொடியில் படம் பிடித்து காட்டிடும் ஓர் அற்புத உறுப்பு தான் கண். இனிமையான காட்சிகளை நமக்களித்து நம்மை இளமையாக வைத்திருக்கும் இனிய உறுப்பு தான் கண்.

சுமார் 14 கோடி அணுக்கள் விழித் திரையில் வேலை செய்கின்றன. 137 மில்லியன் ஒளி உணர் கம்பு செல்கள் (ROD CELLS) கருப்பு வெள்ளை பார்வையை ஈர்க்கின்றன. 7 மில்லியன் கோன் செல்கள் (CONE CELLS) பல நிறங்களின் பார்வையை ஈர்க்கின்றன. கண்களின் அமைப்பைப் பற்றியும் இயக்கத்தைப் பற்றியும் பல பக்கங்கள் எழுதலாம். அதுவல்ல இத்தொடரின் நோக்கம். **கண்களில் ஏற்படும் நோய்களுக்கு காரணம் கண்கள் அல்ல என்பதே.**

கண்களுக்கு, வெளியிலிருந்து விபத்துக்களால் ஏற்படும் பிரச்சினையை தவிர மற்றபடி கண்களில் உண்டாகும் அனைத்து நோய்களுக்கும் காரணம் கண்கள் அல்ல. கண் நோய்கள் அனைத்தும் நோயின் பிரதிபலிப்பே. நோயின் மூல காரணம் கண்கள் கிடையாது.

கண்ணின் ஓரமும் மூக்கின் ஆரம்பமும் சேரும் இடத்தில் சிறுநீர் பையின் (URINARY BLADER) சக்தி ஓட்ட பாதை ஆரம்பமாகின்றது.

கண்ணின் கருவிழிக்கும் நேர் கீழ் பகுதியில் எலும்பின் சிறு பள்ளம் போன்ற பகுதியில் வயிறு (STOMACH) சக்தி ஓட்ட பாதை ஆரம்பமாகின்றது.

கண்ணின் மறு பக்க (காது பக்கம்) ஓரத்தில் பித்த பையின் (GALL BLADER) சக்தி ஓட்ட பாதை ஆரம்பமாகின்றது.

கண்ணின் புருவத்தின் வெளி பக்க ஓரத்தில் மூவெப்ப மண்டல (TRIPLE WARMER) சக்தி பாதை கடந்து செல்கின்றது.

கண்ணின் செயல் திறனில் இவ்வுறுப்புகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. இவ்வுறுப்புகளில் பிரச்சினை ஏற்படும் போது அவை கண்களில் நோயாக பிரதிபலிக்கின்றது.

கண் நோய்களுக்கு நாம் சிகிச்சை அளிக்கும் போது சிறுநீர் பை (URINARY BLADER), பித்தப் பை (GALL BLADER), வயிறு (STOMACH) மற்றும் மூவெப்ப மண்டலம் (TRIPLE WARMER) இவைகளின் இயக்க நிலை மாறுபாட்டை சமநிலைப் படுத்த வேண்டும். அப்படி செய்வதன் மூலமே கண் நோய்களை நாம் நிரந்தரமாக முறையாக தீர்க்க முடியும்.

இவைகளை எதையும் கருத்தில் கொள்ளாமல் கண்ணுக்கு நாம் சிகிச்சையளிப்போமானால் அது தற்காலிக சுகத்தை தந்து நோய் உள் பக்கமாக வளரவே செய்யும். நவீன கால மருந்துகளும் மாத்திரைகளும் தற்காலிக தீர்வையே தருகின்றன. அதனால் தான் சாதாரண பவர் கண்ணாடி போட்டவர்கள் கூட போகப் போக பவரை அதிகமாக்கிக் கொண்டே போகின்றார்கள். நல்ல மருத்துவம் பவரை குறைத்துக் கொண்டு அல்லவா வந்திருக்க வேண்டும்? அல்லது உள்ளதையாவது நிலையாக வைத்திருக்க வேண்டுமே! ஏன் இல்லை.

உதாரணமாக வயிற்றுக்கும் கண்ணுக்கும் உள்ள

*தொடர்ச்சியை 8-ம் பக்கம் பார்க்க...*

## உள்ளே...

உடல் நலம் பேணுவோம் - 4

இஸ்லாமிய ஒழுக்கங்கள் - 5

திமிங்கிலம் (அதிசயப் படைப்புகள்) - 7

பரிந்துரை யாருக்கு - 9

குறுக்கெழுத்துப் போட்டி - 12

# கல்வி நம் தலையாய கடமை

அப்துல் காதிர்

அல்லாஹ் தான் நாடியோருக்கு கல்வி ஞானத்தை வழங்குகின்றான். ஞானம் வழங்கப்பட்டோர் ஏராளமான நன்மைகளை வழங்கப்பட்டுவிட்டனர். அறிவுடையோரைத் தவிர வேறுயாரும் சிந்திப்பதில்லை. (அல் குர்ஆன் 2:269).

இது இறைமறை வாசகம். கல்வி அறிவை ஒருவர் பெற்றுவிட்டால் அவர் ஏராளமான நன்மைகளை கொடுக்கப்பட்டுவிட்டார் என படைத்த இறைவன் கூறுகின்றான். ஆன்மீகம் என்ற பெயரில் எந்த மதமும் கூறாத உன்னத சித்தாந்தத்தை கூறுவதோடு மேற்கூறிய வசனத்தின் மூலம் கல்வி கற்க ஆர்வமூட்டுகிறது இஸ்லாம். இத்தகைய உயர்ந்த வழிகாட்டுதல்களை பெற்றுள்ள நம் சமுதாயம் கல்வியில் போதிய முன்னேற்றம் அடையவில்லை. நம் சமுதாய கல்வி முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகள் யாவை? என்பதை இனங்காட்டுவதோடு கல்வியின்மையின் காரணமாக நம் சமுதாயத்தில் நிலவும் அவலநிலைகளை எடுத்துரைத்து விழிப்புணர்வூட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

நாடு சுதந்திரம் பெற்ற பத்து ஆண்டுகளுக்குள் பருவ வயதை அடைந்த அனைவருக்கும் கல்வி அளிக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் இந்தியாவைப் பொறுத்த அளவில் 100% கல்வி என்பது எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது. 1991ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 52.2% ஆக இருந்த எழுத்தறிவு விகிதம் 2001ஆம் ஆண்டில் 65.38% ஆக உயர்ந்துள்ளது நமக்கு சற்றே ஆறுதல் அளிக்கும் செய்தி என்றாலும் முஸ்லிம்களின் நிலை இன்னும்

பரிதாபகரமாகவே இருந்துவருகிறது. 2001ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு அறிக்கையின்படி முஸ்லிம்களின் எழுத்தறிவு விகிதம் 59.1% ஆகும். அதே நேரம் 2.3% வாழும் கிறிஸ்தவர்களின் விகிதமோ 80.3%த்தை தொட்டுவிட்டது என்பது வியப்பிற்குரிய செய்தி. நம் சமுதாயம், கல்வியில் முன்னேறாததிற்கு காரணம் என்ன? முன்னேற்றத்தின் தடைகற்கள் எவை? என்பதை அலசி ஆராய்வது மிக அவசியம்.

நம் சமுதாயம் கல்வியில் பின்தங்கியிருப்பதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் அதன் பின்னணி நீண்ட சரித்திரத்தை உள்ளடக்கியதாக உள்ளது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீரதீரத்துடன் போராடிய நம் சமுதாயம் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட அந்த கல்வியை புறக்கணிக்கவேண்டும் என்ற நோக்கில் ஆங்கிலம் கற்பது **“ஹராம்”** என்று மார்க்கத் தீர்ப்பளித்தது. ஆங்கிலக் கல்வியை எதிர்க்கிறோம் என்ற பெயரில் நவீன கல்வியை புறக்கணித்தது நம் முன்னோர்கள் செய்த மிகப்பெரிய தவறு. விளைவு நம் பெற்றோர்களின் கல்வியின்மையால் நாமும் கல்வியிழந்து நம் சந்ததிகளையும் கல்வியூட்டும் ஞானமின்றி மற்ற சமுதாயத்தை விட 50 ஆண்டுகள் பின் தங்கிய நிலையில் இருக்கிறோம்.

அடுத்து வியாபார நோக்குடன் நடத்தப்படும் பள்ளிகளில் சேர்ந்து படிக்க போதிய பணவசதி இல்லாமையும் ஓர் காரணம். நவீன பாடதிட்டங்கள் கொண்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் சேர பெரும்பணம் தேவைப்படுகிறது. சாதாரண அரசுடைமை ஆக்கப்பட்ட பள்ளிகளில் கூட ஆரம்பத்தொகை மிக அதிகம். மேலும் குழந்தைகள் தினம், பெற்றோர் தினம், சுற்றுலா என்று மாணவ மாணவிகளிடம் பணங்களை கரக்கும் போக்கும் காணப்படுகிறது. குடும்பச் சூழல், போட்டிகள் நிறைந்த பதவிகள், நிச்சயமற்ற கல்விச் சூழல் போன்றவற்றின் காரணமாக படிப்பை பாதியில் நிறுத்தி கடைகளில் வேலைக்கு சேரும் போக்கும் நம் சமுதாயத்தில் நிறைந்து காணப்படுகிறது. நல்ல அறிவு படைத்த கல்லூரி மாணவர்கள் கூட கல்வியை தொடர முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இராமநாதபுரம், முதுகுளத்தூரைச் சேர்ந்த ஏ. வாசன் என்ற மாணவன் +2 வில் 1200 க்கு 1054 மதிப்பெண் பெற்று திருநெல்வேலி PET பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்தும் கல்லூரி பணம் கட்ட முடியாத நிலையில் உள்ளார். (நன்றி: சமரசம்) ஆக நிதிநிலைமையும் ஒரு காரணமாக அமைகின்றது. 1987-88 ல் மத்திய திட்டகமிஷன் நடத்திய ஓர் ஆய்வின் அறிக்கை இதை உறுதி செய்கின்றது. அப்போதைய இந்தியாவின் எழுத்தறிவு 52.11% ஆக இருக்கையில் முஸ்லிம்கள் 42% தான் கல்வி பெற்றிருக்கின்றனர். காரணம் ஆரம்ப கல்வி நிலையிலேயே பெருவாரியான முஸ்லிம்கள் தங்கள் படிப்பை இடையில் நிறுத்திவிடுகின்றனர் என்றும் இதற்கு மூலகாரணம் நிதி நிலைமைதான் என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

மேலும் தேசிய மாநில சர்வே அமைப்பு (N.S.S.A) 1993-94 மற்றும் 1999-2000 ல் நடத்திய ஆய்வில் இஸ்லாமிய இளைஞர்கள் பலர் தம் படிப்பை பாதியிலேயே நிறுத்தி அன்றாட கூலி பெறும் தொழிலாளியாக மாறிவிடுகின்றனர் என்ற உண்மையும் தெரியவருகிறது. மேலும் படித்த இளைஞர்கள் மத்தியிலும் வேலையின்மை அதிகரித்திருப்பதாகவும் அவ்வறிக்கை கூறுகின்றது.

> **நம் சமுதாயத்தில் படித்தவர்கள், உயர்பதவி வகிப்பவர்கள் குழு அமைத்து ஆங்காங்கே விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதோடு வருடந்தோறும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் மேல் படிப்புக்கு வழிகாட்ட ஆலோசனை மன்றங்களை அமைத்து மாணவ மாணவிகளின் ஐயங்களை தெளிவுப்படுத்த வேண்டும். இதனை நாம் செய்ய தவறியதின் காரணமாக நல்ல புத்திசாலி மாணவர்கள் கூட தம் திறமையை முழுமையாக வெளிப்படுத்த முடிவதில்லை.**

ஆகவே பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தும் போக்கு மாறவேண்டும். கல்வியின்மையால் நாம் அன்றாடம் பல கஷ்டங்களை சந்திக்கின்றோம். இந்த வளைகுடா வாழ்க்கையில் கூட 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் எத்தனையோ சகோதரர்களுக்கு எவ்வித பதவி உயர்வும், ஊதிய உயர்வும் இல்லை. காரணம் கல்வியின்மைதான். எத்தனையோ நல்ல அறிவுபடைத்த புத்திசாலிகள் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு பாஸ்போர்ட் எடுத்து வளைகுடாவிற்கு வந்து அதன் விளைவை அனுபவித்து கொண்டிருக்கின்றனர். தன்னைப்போல் தன் சந்ததியும் கஷ்டப்படக்கூடாது. எத்தகைய கஷ்டங்கள் வந்தாலும் அவர்களை படிக்க வைப்பேன் என்று நம் சமுதாய இன்றைய தலைமுறையினர் உறுதிபூண வேண்டும். நம் பிள்ளைகளுக்கு கல்வி அளிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். வாய்ப்பு வசதிகள் இல்லை என்ற ஆதங்கம் நம்மிடம் ஓரளவு இருந்தாலும் பெருவாரியான முஸ்லிம்கள் கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்துவதுமில்லை.

பணம் படைத்த எத்தனையோ வர்த்தகர்கள் ஓரளவுக்கு எழுத படிக்க தெரிந்த உடனேயே தனது வர்த்தகத்தை கவனிக்கச் சென்றுவிடுகின்றனர். எத்தனையோ வர்த்தகர்களின் வாரிசுகள் படிப்பறிவற்றவர்களாக இருக்கின்றனர். அரசாங்கம் கல்வியளிக்க முன்வந்தும் நம் மக்கள் ஆர்வக் குறைவாகயிருப்பதும் கவலையளிக்கக் கூடிய செய்தியாக இருக்கிறது. அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின் கீழ் தொடக்கப்பள்ளி இல்லாத கிராமங்களில் கல்வியளிக்கும் பணியை தமிழக அரசு ஆரம்பம் செய்தது. சிவகங்கை மாவட்டம் இளையான்குடியை அடுத்த கல்லாணி எனும் கிராமத்தில் இரண்டு மாணவர்கள் முன்வரவே கல்வி ஆரம்பமானது. மாணவர்களின் எண்ணிக்கை இரண்டை தாண்டாததால் மாவட்ட தொடக்கக் கல்வி அதிகாரி பள்ளியை மூடவுத்தரவிட்டார் புரிகிறதா? இதுதான் நம் நிலைமை.

ஆகவே நம் சமுதாயம் கல்வியில் ஆர்வம் காட்டுவதோடு வரும் வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அடுத்து நம் சமுதாயத்திற்கென்று தனிப்பள்ளிக்கூடங்கள் போதிய அளவு ஏற்படுத்தப்பட வேண்டும். காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் போன்றோர் சிறுபான்மையினரின் கல்விக்காக போராடி பெற்ற உரிமைகளை நம் சமுதாயத்தினர் போதிய அளவில் பயன்படுத்தவில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. உயர் கல்விகளில் அக்கறை காட்டிய நம் முன்னோர்கள் ஆரம்ப, நடுநிலை, பள்ளிக்கூடங்களில் போதிய அக்கறை காட்டவில்லை. தமிழகத்தை எடுத்துக் கொண்டால் 25 கலை மற்றும் பொறியியல் கல்லூரிகள், 19 பாலிடெக்னிக்குகளும் உள்ளன. ஆரம்ப கல்வியளிக்கும் பள்ளிகள் போதிய அளவில் இல்லை. விளைவு நம் சமுதாய சிறுவர்கள் பிற சமுதாய பள்ளிகளில் சேர வேண்டியுள்ளது. இதனால் பருவ வயதினரின் ஐவேளை தொழுகைகளுக்கு இடையூறாக அது

அமைகிறது. எத்தனையோ பள்ளிகளில் வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு கூட அனுமதி மறுக்கப்படும் அவல நிலையும் காணப்படுகின்றது. இது போதாதென்று எல்லா மத பண்டிகைகளுக்கும் பணம் வாங்கி கொண்டு கோலாகலமாக கொண்டாடும் நிலைமையும் கவலையளிக்கிறது. இன்றைய சூழலில் சரஸ்வதி பூஜையும், ஆயுத பூஜையும் கொண்டாடாத பள்ளிகளே இல்லை. நம் சமுதாயத்தினரும் பள்ளி விதிமுறைக்குட்பட்டு பல்வேறு பண்டிகைகளை வேண்டா வெறுப்பாகக் கொண்டாடுகின்றனர்.

இந்நிலை மாறவேண்டுமென்றால் நமக்கென்று தனிப் பள்ளிக்கூடங்கள் உருவாக வேண்டும். கன்னிப்பெண்கள் கரையேறுவதற்கும், பள்ளிவாசல் கட்டுவதற்கும் அள்ளி வழங்கும் நம் சமுதாயச் செல்வந்தர்கள் தொடக்கப்பள்ளிகள் நிறுவுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். தொடக்க கல்வியற்ற நிலையில் பட்டபடிப்பு என்பது எட்டாக்கனியாக போய்விடும். நமது இஸ்லாமிய அறக்கட்டளையின் கீழ் இயங்கும் எத்ததனையோ கல்வி நிலையங்களில் மூன்றிலொரு பங்கு கூட நம் மாணவர்கள் படிக்கவில்லை என்பதே இதற்கு சான்று.

மேலும் மிக குறைந்த அளவில் காணப்படும் புத்திசாலி மாணவர்கள் கூட போதிய வழிகாட்டுதலின்றி ஏனோ தானோ என்று குறிக்கோள் அற்ற நிலையில் மேற்படிப்பை தொடர்கின்றனர். தொழில் சார்ந்த கல்விகளில் சேர பத்தாம் வகுப்பு முடித்தவுடனேயே அதற்கான பாடபிரிவுகளை தேர்ந்தெடுத்து படிக்கவேண்டும். S.S.L.C யில் நல்ல மதிப்பெண் பெற்று வரலாறு, பொருளாதாரம் என்று எதையாவது எடுத்துவிட்டு பின் அது தொடர்பான மேற்படிப்புகளை பெயர் அளவில் தொடரும் நிலையை தவிர்க்கவேண்டும். +2 படிக்கும் எத்தனையோ மாணவர்கள் எத்தனையோ படிப்புகள் இருந்தும் இயந்திரத்தனமாக B.A., B.B.A., B.Com. என்று ஏதாவது ஒன்றில் சேர்ந்துவிடுகின்றனர். புதிதாக வந்து கொண்டிருக்கும் புதிய படிப்புகளில் ஆர்வம் காட்டுவதில்லை. Micro Biology, Bio Chemistry, Chemical Engineering, Textile Tecnology, Leather Tecnology, மீன் வள அறிவியல் போன்ற புதிய படிப்புகளில் சேர ஆர்வம் காட்ட வேண்டும்.

அடுத்து நாம் எடுத்து படிக்கும் துறையில் ஆழ்ந்த மேற்படிப்பை மேற்கொள்ளவேண்டும். சமூகவியல் படித்து கொண்டிருக்கும் போதே (B.L) சட்டம் படிக்க சென்றுவிடுவதால் ஒரே துறையில் ஆழ்ந்த அறிவு பெறமுடியவில்லை. இந்த நூற்றாண்டின் இணையற்ற படிப்பு என்று வர்ணிக்கப்படும் IT (Information & Technology), Elecronic & Communication போன்ற படிப்புகளில் நம் சமுதாயம் ஆர்வம் காட்டினால் இஸ்லாமிய சமுதாயத்திற்கு நாம் எண்ணற்ற சேவைகளை செய்யலாம். Online வகுப்புகளில் இஸ்லாமிய பாடம் மற்றும் பட்டபடிப்புக்கு வழி செய்யலாம். வருங்காலத்தில் வீட்டிலிருந்தே பெண்களும், இல்லத்தரசிகளும் Online ல் கல்வியை பெரும் பங்களிப்பை நம் சமுதாயதிற்கு செவ்வனே செய்யலாம். இன்னும் பத்திரிக்கை சார்ந்த படிப்புகள் இன்றைய கால சூழலில் மிக இன்றியமையாதது. Journalism படித்தவர்கள் நம் சமுதாயத்தில் இல்லாத காரணத்தினால் நம் சமுதாய பத்திரிக்கைகள் தரம் குன்றியவைகளாகவே இருக்கின்றன. ஆக படிப்புகள் எத்தனையோ இருந்தும் கூட நம் சமுதாய மாணவர்களின் பின்னடைவுகளுக்கு காரணம் நமக்கென்று வழிகாட்டிகள் இல்லை. கல்வியறிவற்ற பெற்றோர்களினால் தம் சந்ததிகளுக்கு வழிகாட்ட இயலாது.

நம் சமுதாயத்தில் படித்தவர்கள், உயர்பதவி வகிப்பவர்கள் குழு அமைத்து ஆங்காங்கே விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதோடு வருடந்தோறும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் மேல் படிப்புக்கு வழிகாட்ட ஆலோசனை மன்றங்களை அமைத்து மாணவ மாணவிகளின் ஐயங்களை தெளிவுப்படுத்த வேண்டும். இதனை நாம் செய்ய தவறியதின் காரணமாக நல்ல புத்திசாலி மாணவர்கள் கூட தம் திறமையை முழுமையாக வெளிப்படுத்த முடிவதில்லை. போதிய வழிகாட்டுதல் இல்லாத காரணத்தினால் அரசாங்க சர்வீஸ் கமிஷன் போன்ற தேர்வுகளில் கூட எழுதுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். 1983ல் மத்திய உள்துறை அமைச்சகம் அளித்த புள்ளி விவரத்தின் Group-3 சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் பங்கேற்ற 2352 மாணவர்களில் 76 (3.27%) பேர்தான் முஸ்லிம்கள் இதேப் போல் Group-2 தேர்வில் பங்கேற்ற 497 பேரில் 12 பேர் தான் (2.44%) ம் உதவி சர்ஜன்கள் தேர்வில் 3503 பேரில் 162 பேர் தான் (4.62%) பங்களித்திருக்கின்றனர்.

அடுத்ததாக நம் கல்விக்கூடங்களிலுள்ள சில தவறுகளையும் இங்கு சுட்டிகாட்டுதல் அவசியம். இன்றைய நவீன கல்வி கோட்பாட்டின் பின்னணியில் மேற்கத்திய கலாச்சாரம் நம் சமுதாய மாணவர்களையும் பீடித்திருக்கிறது. இஸ்லாம் கூறும் நல்லொழுக்கங்கள், கற்புநெறி, இறையச்சம் போன்றவை போதிக்கபடாத காரணத்தினால் மேற்கத்திய காலச்சாரத்திற்கு பலியாகி இஸ்லாத்தையே விமர்சிக்கும் பெண்ணியவாதியாக நவீனத்தை பேசும் அறிவு(?) ஜீவிகளாக மாறிவிடுகின்றனர்.

இன்றைய அவசிய தேவை முஸ்லிம்களால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் இஸ்லாமிய நல்லொழுக்க பாடத்தை கட்டாயம் கற்பிக்க வேண்டும். அதுமட்டுமல்லாது அரபி மதரஸாக்களில் ஆலிம்களின் துணையோடு இஸ்லாமிய சட்டம், குர்ஆன் விளக்கவுரை போன்றவற்றைக் கற்பிப்பது மிகவும் அவசியம். நம் சமுதாய கல்லூரிகளின் நிலையே இதுவென்றால் அரபி மதரஸாக்கள் முழுக்க முழுக்க ஆன்மீக வட்டத்திற்குள்ளேயே நிற்கின்றன. உத்திர பிரதேசத்தில் "தீனீ த:லீம்" என்ற பெயரில் 6000 கிராமங்களில் நடத்தப்படும் மதரஸாக்களில் அறிவியல் சார்ந்த எந்த நூலும் பாடத்திட்டத்திலில்லை. இத்தகைய மதரஸாக்களில் பட்டம் பெற்று வெளிவரும் ஆலிம்கள், இன்றைய நவீன பிரச்சனைகளான இன்சூரன்சு, குளோனிங், ஷேர்மார்கட் போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சனைகளுக்கு மார்க்கத்தீர்ப்பு கூற தயக்கம் காட்டுகின்றனர். குறைந்த பட்சம் ஆலிம்களுக்கு கம்பியூட்டர் அறிவு அவசியம். மேலும் இன்றைய Internet யுகத்தில் பல வித அனாச்சாரங்களில் பயன்படும் Internet போன்றவற்றில் இஸ்லாமிய கருத்தாக்கங்கள் மற்றும் இஸ்லாம் எதிர்கொள்ளும் சவால்களை உலகளாவிய அளவில் விளக்கம் அளிக்க அழைப்புப்பணியை வலைமனைகள் மூலம் முடுக்கி விட நம் சமுதாய ஆலிம்கள் திறமை படைத்தவர்களாக உருவாக வேண்டுமென்றால் நம்முடைய அரபி மதரஸாக்களின் பாடத்திட்டங்களில் புனர்நிர்மாணம் அவசியம்.

இன்று ஆலிம்கள் தொழுகை, நோன்பு போன்றவற்றோடு தம் பணியை சுருக்கிக் கொள்வதினால் படிப்பறிவு மிக்க சில முஸ்லிம் இளைஞர்கள் வலைமனைகளில் இஸ்லாமிய சேவையில் ஈடுபட்டாலும் மார்க்க சட்ட விளக்கங்களுக்கு ஆலிம்களையே சார்ந்திருக்கின்றனர். மதரஸாக்களில் மார்க்க கல்வியுடன் நவீன தொழில் நுட்ப கல்வியும் சேர்த்தால் இன்றைய நவீன உலகில் முஸ்லிம்கள் இழந்த பெருமையை மீண்டும் பெறலாம். இறைவன் துணை செய்வானாக!

(ஆக்கத்திற்கு உதவியவை Manorama Year Book 2005, தினமணி.காம், ஒற்றுமை, சமரசம்)

# உடல் நலம் பேணுவோம் (தொடர்-2)

*பாளை இனியவன்*

## தேவை சரிவிகித உணவு

உணவின் ருசி கருதி தனக்குப் பிடித்த உணவை அதிகமாக உட்கொள்வதைத் தவிர்த்து பல உணவுகளைக் கலந்து உண்ணப் பழகிக் கொள்ள வேண்டும். புரோட்டீன், கொழுப்பு, வைட்டமின்கள், தாதுப் பொருட்கள், மாவுச் சத்து, நார்ச் சத்து போன்ற எல்லாம் கலந்த உணவை சரிவிகித உணவு எனலாம். அத்தோடு உட்கொள்ளும் உணவுப் பொருளின் வெப்ப வெளிப்பாட்டுத் திறன் (கலோரி) ஐயும் கணக்கிடத் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஒரு நாளைக்கு நாம் உட்கொள்ள வேண்டிய சரிவிகித உணவுப் பட்டியலையும் கலோரிகளை கணக்கிடும் முறை பற்றியும் ஒரு மாதிரி அட்டவனையை கீழே தருகிறோம்.

| வ.எண் | உணவுப் பொருள் | அளவு (கிராமில்) | கலோரி/கிராம் | கணக்கிடும் முறை | கலோரியின் நிகர அளவு |
|---|---|---|---|---|---|
| 1. | அரிசி, கோதுமை, ராகி | 460 | 3.46 | 460 x 3.46 | 1591 |
| 2. | பருப்பு மற்றும் பயிர் வகைகள் | 40 | 3.40 | 40 x 3.40 | 136 |
| 3. | கீரை வகைகள் | 40 | 0.40 | 40 x 0.40 | 16 |
| 4. | காய்கறி வகைகள் | 60 | 0.40 | 60 x 0.40 | 24 |
| 5. | கிழங்கு வகைகள் | 150 | 1.20 | 150 x 1.20 | 180 |
| 6. | எண்ணெய் மற்றும் நெய் | 40 | 9.00 | 40 x 9.00 | 360 |
| 7. | சர்க்கரை | 30 | 4.00 | 30 x 4.00 | 120 |
| | | | | **மொத்த கலோரிகள்** | 2452 |

## நாளொன்றுக்குத் தேவைப்படும் கலோரியின் அளவு

| வ. எண் | வேலையின் தன்மை | தேவைப்படும் கலோரி (ஆண்கள்) | தேவைப்படும் கலோரி (பெண்கள்) | 1லிருந்து 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 4லிருந்து 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 10 லிருந்து 12 வயதிற்குட்பட்ட குழந்தைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | எளிய வேலை | 2400 | 1900 | 1200 | 1500 | 2100 |
| 2 | மிதமான வேலை | 2800 | 2200 | — | — | — |
| 3 | கடினமான வேலை | 3900 | 3000 | — | — | — |

## தவிர்க்க வேண்டியவை

**போதைப் பொருட்களான மது, புகைபிடித்தல் குட்கா வகைகள், போதை மருந்து போன்றவற்றை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.** துரித உணவு வகைகளான (Fast Food) ஐஸ் கிரீம், சாக்லேட், செயற்கை குளிர்பான வகைகள் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதில் ப்ரிசர்வேட்டர் போன்ற வேதிப் பொருட்கள் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும். வனஸ்பதி போன்ற சுத்திகரிக்கப்பட்ட உணவு (Refined Foods) களையும், வெள்ளை மைதா போன்ற மிகச் சுத்திகரிக்கப்பட்டவைகளையும் (Processed Food) குறைத்துக் கொள்வது நல்லது. ஒரே எண்ணையை பல முறை உபயோகப்படுத்தக் கூடாது.

## சமையல் எண்ணை ஓர் தெளிவு

சமையல் எண்ணையில் கொழுப்புச் சத்து அதிகமாக உள்ளது. கொழுப்புச் சத்துக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1) முழுமையடையாத கொழுப்பு (Poly Unsaturated Acid)
2) முழுமையடைந்த கொழுப்பு (Saturated Fatty Acid)

இதில் முதல்வகைக் கொழுப்பில் அதிக தீங்குகள் இல்லை. இவை இரத்தக் குழாயில் படியாது. இதிலுள்ள Linolic Acid கொலஸ்ட்ராலை குறைக்கும் தன்மையுடையது.

இரண்டாம் வகைதான் மிக ஆபத்தானது. இதில் உள்ள கொழுப்புக்கள் இரத்தக் குழாயில் படிந்து பெரும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது.

## வாசகர்கள்! – கருத்து!

அன்பிற்குரிய "சுவனப்பாதை" வாசகர்களே!!!
சுவனப்பாதையில் பிரசுரமாகும் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் குறித்த உங்கள் மேலான கருத்துக்களை "சுவனப்பாதை" பத்திரிக்கைக் குழு வரவேற்கிறது. உங்களின் கருத்துக்கள், எண்ணங்கள், உங்களின் எழுத்துப் படைப்புகள் என எதுவாகினும் கீழ்கண்ட முகவரிக்கு மடல் மூலமாக அல்லது **e-mail** மூலமாக அனுப்பலாம்.

Mr.Ibrahim(Madani), Tamil Division,
**P.O.Box-32628,** Jeddah-21438, K.S.A
email : suvanam@gmail.com

### சில எண்ணெய்களும் அதன் கொழுப்பு விகிதங்களும்

| வ.எண் | எண்ணெய்யின் பெயர் | முழுமையடையாத கொழுப்பு விகிதம் (Poly Unsaturated Acid) | முழுமையடைந்த கொழுப்பு விகிதம் (Saturated Fatty Acid) |
|---|---|---|---|
| 1 | சபோலா (கார்டி) ஆயில் | 73.3% | 9.4% |
| 2 | கார்ன் ஆயில் | 57.4% | 12.7% |
| 3 | சன் ∴பிளவர் ஆயில் | 52% | 17 % |
| 4 | சோயா ஆயில் | 50.8 % | 15 % |
| 5 | கடலை எண்ணெய் | 31 % | 17.4 % |
| 6 | நல்லெண்ணெய் | — | — |
| 7 | கடுகு எண்ணெய் | 18.1 % | 5.5 % |
| 8 | பாம் ஆயில் | 9 % | 53 % |
| 9 | தேங்காய் எண்ணெய் | 1.8 % | 86.3 % |
| 10 | நெய் | 0.0 % | 64.2 % |

எனவே முழுமையடைந்த கொழுப்புக்கள் அதிகமாக உள்ள தேங்காய் எண்ணெய், நெய், பாம் ஆயில் போன்றவற்றை தவிர்த்துக் கொள்வதோடு சபோலா கார்டி ஆயில், கார்ன் ஆயில், சன் ∴பிளவர் போன்ற சமையல் எண்ணெய்களை பயன்படுத்தி ஆரோக்கியம் காப்பீர்.

### நோயற்ற வாழ்வே! குறைவற்ற செல்வம்!!

மனித வாழ்க்கையில் மரணம் என்பது தடுத்து நிறுத்த முடியாத ஒன்று, எனினும் நாம் உடல் நலத்துடன் வாழ முயற்சித்தல் வேண்டும். இவ்வளவு விஷயங்களை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்துவது சாத்தியம் தானா? முயன்றால் நம்மால் முடியும். மார்க்கக் கண்ணோட்டத்தோடு நோக்கினால் நிச்சயம் முடியும் இன்ஷா அல்லாஹ்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்... *ஐந்துக்கு முன் உள்ள ஐந்தினைப் பேணிக் கொள்ளுங்கள். 1) முதுமைக்கு முன் உள்ள வாலிபம் 2) வறுமைக்கு முன் உள்ள செல்வம் 3) நோய்க்கு முன் உள்ள ஆரோக்கியம் 4) வேலைக்கு முன் உள்ள ஓய்வு 5) மரணத்திற்கு முன் உள்ள வாழ்வு (ஆதாரம் : முஸ்னத் ஹாக்கிம்)*

எனவே உத்தம நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்று நோய்க்கு முன் உள்ள ஆரோக்கிய வாழ்வினைப் பெற்று அதனைத் தக்க வைத்துக் கொள்ள மரணத்திற்கு முன் உள்ள வாழ்வில் வேலைக்கு முன் உள்ள ஓய்வினை உண்பதற்கும் உறங்குவதற்கும் மட்டுமே பயன்படுத்தாது நமக்கும், நம் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், படைத்த இறைவனுக்கும் ஆற்ற வேண்டிய நற்செயல்களை கருத்தில் கொண்டு உணவுக் கட்டுப்பாட்டுடன் கூடிய உடற்பயிற்சி செய்து நோயற்ற வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவன் நமக்கு உதவி செய்வானாக! ஆமீன்!!

#### தொகுப்புக்கு உதவியவை


1) மனோராமா இயர் புக் 2005

2) ஹெல்த் மாத இதழ் ஜனவரி 2005

3) பேராசிரியர் காந்தி மணி எழுதிய நோயின்றி வாழ எளிய வழிகள்

4) டாக்டர் லோக மணியன் எழுதிய சித்தமருத்துவம் கூறும் உணவே மருந்து

5) தினமணி


# இஸ்லாமிய ஒழுக்கங்கள்

## (மல ஜலம் கழிக்கும்போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள்)

*K.L.M. இப்ராஹீம் மதனி*

மலஜலம் கழிக்கும் முறை உட்பட உங்களின் நபி, உங்களுக்கு கற்றுக்கொடுத்து விட்டார்களா என ஸல்மான் (ரலி) அவர்களிடத்தில் யூத மதத்தை சேர்ந்த ஒருவர் கேட்ட போது, ஆம்! மல ஜலம் கழிக்கும் போது கிப்லாவை நாங்கள் முன்னோக்கக் கூடாதென்றும், வலது கையினால் சுத்தம் செய்யக்கூடாதென்றும், மூன்று கற்களுக்கு குறைந்த கற்களைக்கொண்டு சுத்தம் செய்யக்கூடாதென்றும், இன்னும் எலும்பு (மிருகங்களின்) விட்டைகளைக் கொண்டு சுத்தம் செய்யக் கூடாதென்றும் நபியவர்கள் தடை செய்தார்கள். அறிவிப்பவர்: ஸல்மான் (ரலி), ஆதாரம்: முஸ்லிம்

அன்புள்ள சகோதரர்களே? சிந்தித்துப்பாருங்கள்! மல ஜலம் கழிக்கும் முறையைக்கூட நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்திருக்கின்றார்கள் என்றால் இஸ்லாத்தில் கற்றுத்தர வேண்டிய எதையாவது நபியவர்கள் கற்றுத்தராமல் விட்டிருப்பார்களா? இல்லவே இல்லை.

ஆகவே நபியவர்களின் ஒவ்வொரு சுன்னத்துக்களையும் நாம் பேணி நடக்கும் போது மல ஜலம் கழிப்பது கூட நற்கூலிக்கான ஒன்றாக கருதப்படும். நபியவர்களின் ஒவ்வொரு சுன்னத்துக்களையும் பேணி நடப்பதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக.

### மல ஜலம் கழிக்கும் முறைகள் பின்வருமாறு

**1. கிப்லாவை முன்னோக்கியோ பின்னோக்கியோ மல ஜலம் கழிக்கக்கூடாது**

நீங்கள் மல ஜலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்கவும் வேண்டாம், பின்னோக்கவும் வேண்டாம் என

நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். ஆதாரம் :- நஸாயி

**2. கட்டிடத்திற்குள் கிப்லாவை முன்னோக்கி, பின்னோக்கி மல ஜலம் கழிப்பதில் தவறில்லை**

ஒரு நாள் ஹ∴ப்ஸா (ரலி) அவர்களின் வீட்டிற்கு மேல் நான் ஏறினேன், அப்போது நபி (ஸல்) அவர்கள் ஷாம் தேசத்தை முன்னோக்கியும் கிப்லாவை பின்னோக்கியும் மல ஜலம் கழிப்பதை நான் பார்த்தேன் என அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆதாரம் :- திர்மிதி

**3. மல ஜல கூடத்திற்குள் நுழையும் போது இடது காலை முன் வைத்து பின் வரும் துஆவை ஓத வேண்டும்**

**اللّهُــمإِنـــيْ أَعُــوْذُبِــكَ مِــنَ الـــخُبْثِ وَالـــخَبَائِث**

அல்லாஹும்ம இன்னி அஊது பி(க்)க மினல் குபுஸி வல் கபாயிஸி

பொருள் :- இறைவா! ஆண், பெண் ஷைத்தான்களின் தீங்குகளை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

**4. கட்டிடமில்லாத வெளி இடங்களில் மல ஜலம் கழிக்கும் போது மற்றவர்கள் பார்க்காத அளவுக்கு தூரமாகிக் கொள்ள வேண்டும்.**

நபி (ஸல்) அவர்கள் மலம் கழிக்கச் சென்றால் மற்ற யாரும் அவர்களை பார்க்காத அளவுக்கு (தூரமாக) செல்வார்கள். ஆதாரம் :- அபூதாவூத்

நபியவர்கள் மல ஜலம் கழிக்க விரும்பினால் பூமியை நெருங்கும் வரைக்கும் தன் ஆடையை உயர்த்தமாட்டார்கள். ஆதாரம் :- திர்மிதி, அபூதாவூத்

**5. வலது கரத்தால் சுத்தம் செய்யக்கூடாது**

உங்களில் ஒருவர் மல ஜலம் கழிக்க நுழைந்தால் தன் ஆண் உறுப்பை தன் வலது கையினால் தொடக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். ஆதாரம்: அபூதாவூத், நஸாயி

**6. கற்களைக் கொண்டு சுத்தம் செய்யலாம், எனினும் தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்வதே சிறந்தது**

உங்களில் ஒருவர் மல ஜலம் கழிக்கச் சென்றால் சுத்தம் செய்யக்கூடிய மூன்று கற்களைக் எடுத்துச் செல்லட்டும், அது சுத்தம் செய்வதற்குப் போதுமானது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: அபூதாவூத்

தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்த குபா வாசிகளை அல்லாஹ் புகழ்ந்து கூறுகிறான்.

பரிசுத்தமாக இருப்பதையே விரும்பும் (சிறந்த) மனிதர்கள் அதில் இருக்கின்றனர், அல்லாஹ்வும் (இத்தகைய) பரிசுத்தமாக இருப்போரை நேசிக்கின்றான். (9:108)

நபி (ஸல்) அவர்கள் கழிப்பறைக்குள் நுழைந்தால் நானும் என்னைப் போன்ற ஒரு சிறுவரும் நபியவர்களுக்கு தண்ணீர் பாத்திரத்தை சுமந்து செல்வோம். நபியவர்கள் அதைக் கொண்டு சுத்தம் செய்வார்கள். ஆதாரம் :-நஸாயி

**7. மூன்று கற்களை விட குறைந்த கற்களைக் கொண்டும் சுத்தம் செய்யலாம்**

நபி (ஸல்) அவர்கள் மல ஜலம் கழிப்பதற்கு செல்லும்போது மூன்று கற்களைக் கொண்டு வரும்படி என்னிடம் கூறினார்கள், நான் இரண்டு கற்களையும் ஒரு விட்டையையும் கொண்டு வந்தேன், இரண்டு கற்களையும் எடுத்துக் கொண்டு விட்டையை (பார்த்து இது) அசுத்தமானதென்று வீசிவிட்டார்கள் என அபூ உபைதா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆதாரம் :- திர்மிதி

**8. உட்கார்ந்து கொண்டு மல ஜலம் கழிக்க வேண்டும்**

நபி (ஸல்) அவர்கள் நின்று கொண்டு சிறுநீர் கழித்ததாக யாராவது உங்களுக்கு கூறினால் அதை நீங்கள் நம்ப வேண்டாம், நபியவர்கள் உட்கார்ந்து கொண்டுதான் சிறுநீர் கழித்திருக்கிறார்கள் அறிவிப்பவர். ஆயிஷா (ரலி), ஆதாரம்: நஸாயி

**9. நிர்ப்பந்தமான சூழ்நிலைகளில் நின்று கொண்டு சிறுநீர் கழிக்கலாம்**

நபி (ஸல்) அவர்கள் ஒரு கூட்டத்தாரின் குப்பை மேட்டுக்கு வந்து அதன் மீது நின்று கொண்டு சிறுநீர் கழித்தார்கள். ஆதாரம் :- திர்மிதி, அபூதாவூத்

**10. மனிதர்கள் களைப்பாறும் இடம், நடைபாதை, மரநிழல் போன்ற இடங்களில் மல ஜலம் கழிக்கக்கூடாது**

மனிதர்கள் களைப்பாறும் இடம், நடை பாதை, நிழல் (போன்ற) இம் மூன்று இடங்களில் மல ஜலம் கழித்து (அதனால் மக்களின்) சாபத்தை பெறுவதை தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் :- அபூதாவூத்

**11. தேங்கிக் கிடக்கும் தண்ணீரில் சிறுநீர் கழிக்கக் கூடாது**

ஒழு செய்யக்கூடிய, அல்லது குளிக்கக்கூடிய தேங்கிக் கிடக்கும் தண்ணீரில் சிறுநீர் கழிக்கக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். ஆதாரம் :- நஸாயி

**12. மல ஜலம் கழித்த பின் கையை சுத்தம் செய்து கொள்ள வேண்டும்**

நபி (ஸல்) அவர்கள் மல ஜலம் கழித்து (சுத்தம் செய்த) பின் மண்ணில் தன் கையை தேய்த்து (சுத்தம் செய்தார்கள்). ஆதாரம்: நஸாயி

**13. சிறுநீர் கழிக்கும் போது ஸலாம் சொல்லப்பட்டால் அதற்கு விடையளிக்கக்கூடாது**

நபி (ஸல்) அவர்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் போது அவர்களுக்கு பக்கத்தில் சென்று கொண்டிருந்த ஒரு மனிதர் நபியவர்களுக்கு ஸலாம் கூறினார், அதற்கு நபியவர்கள் விடையளிக்கவில்லை. ஆதாரம்: நஸாயி

**14. சிறுநீர் கழித்து சுத்தம் செய்யாததினால் கிடைக்கும் தண்டனை**

நபி (ஸல்) அவர்கள் இரண்டு கப்ருக்கு பக்கத்தில் சென்று கொண்டிருக்கும் போது அவ்விரு கப்ருகளிலுள்ளவர்களும் வேதனை செய்யப்படுகின்றார்கள், (ஆனால்) பெரும் விஷயத்தில் அவ்விருவரும் வேதனை செய்யப்படவில்லை, அதில் ஒருவர் சிறுநீர் கழித்தால் சுத்தம் செய்யமாட்டார், மற்றவர் கோள்சொல்லித் திரிபவராக இருந்தார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: நஸாயி

**15. கழிப்பறையிலிருந்து வெளியாகும் போது வலது காலை முன்வைத்து பின் வரும் துஆவை ஓத வேண்டும்**

**غُفْرَانَــك**

கு∴ப்ரான(க்)க

பொருள் :- உன்னிடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன். ஆதாரம்: திர்மிதி

# திமிங்கிலம் (Whale)

*E. உஸ்மான் அலி*

அல்லாஹ் படைத்த பாலூட்டிகள் அனைத்திலும் திமிங்கிலம் மிக வித்தியாசமான சில தகவமைப்புகளைப் பெற்று விளங்குகின்றது. தன் வாழ் நாள் முழுதும் தண்ணீரிலேயே கழிக்கக்கூடிய ஒரே பாலூட்டி "திமிங்கிலம்" ஒன்றுதான். மேலும் நான்காயிரத்திற்கு மேற்பட்ட பாலூட்டி இனங்களில் மீன்களை ஒத்த உடல் அமையப் பெற்று நடக்கக் கூடிய வகையில் கால்கள் அமைப்பைப் பெறாத ஒரே உயிரினமும் திமிங்கிலம் ஒன்றுதான். இதுவும் அல்லாஹ்வுடைய படைப்புக்களில் விதிவிலக்கான அம்சமாகும். மேலும் இவைகளின் தலையின் மேற்பரப்பில் அமைந்துள்ள Blow hole என்ற சுவாசக் குழாய் அமைப்பு நுரையீரலுடன் நேரடியாக இணைக்கப் பட்டுள்ளதாலும் மற்ற பாலுட்டிகளைப் போன்று தொண்டையின் மூலம் சுவாசம் செல்ல வேண்டிய அமைப்பு இல்லாததனாலும் ஒரே நேரத்தில் இவைகளினால் உண்ணவும் சுவாசிக்கவும் இயலுகின்றது. இந்த அமைப்பும் இவற்றிற்கு இறைவனால் பிரத்தியேகமாக கொடுக்கப்பட்ட அருட் கொடையாகும்.

பொதுவாக எல்லா பாலூட்டிகளுக்கும் இருக்கக்கூடிய பித்தப் பை (gall bladder) மற்றும் குடல் வால்வு (appendix) போன்ற உள் உறுப்புக்கள் இல்லாத அமைப்புகள் விதிவிலக்கான அம்சமாக திகழ்கின்றது. இந்த உலகில் வாழக்கூடிய உயிரினங்களில் மிகப் பெரியதும் இதுவரை கண்டெடுக்கப்பட்ட டைனோசர்களின் எலும்புக் கூடுகளில் மிகப் பெரிய அளவினை ஒத்த உடல் அளவையும் பெற்று பல சிறப்பு அம்சங்களுடன் அல்லாஹ்வுடைய படைப்பின் வல்லமையைப் பறைச்சாற்றும் இந்த திமிங்கிலங்களை பற்றி விரிவாக பார்ப்போம்.



திமிங்கிலம் என்றுச் சொன்னவுடன் நமக்கு மிகப் பெரிய அளவிலான மீனாகத்தான் நினைவுக்கு வருகின்றது. இவைகள் பல வகையிலும் மீன்களை ஒத்திருப்பினும் கூட இது மீன் இனத்தைத் சாராத பாலூட்டி ஆகும். மீன்கள் குளிர் இரத்த உயிரி ஆகும். மேலும் இவைகள் தண்ணீருக்கடியில் தங்கள் செவில்கள் மூலம் ஆக்ஸிஜனை கிரகிக்கும் அமைப்பைப் பெற்றுள்ளவை. ஆனால் திமிங்கிலங்கள் வெப்ப இரத்த பிராணி ஆகும். இவைகளின் உடல் வெப்ப நிலை மனிதனை போன்றே 37 டிகிரி செல்சியஸ் ஆகும். இவைகள் மற்ற பாலூட்டிகளைப் போன்றே நுரையீரல் அமைப்பை பெற்று விளங்குவதால் தங்களுக்குத் தேவையான ஆக்ஸிஜனை தண்ணீரின் மேற்பரப்பில் வந்துதான் பெற்றுக் கொள்ள இயலும்.

திமிங்கிலத்தில் 75-க்கு மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தனி குணாதிசயங்களைப் பெற்று விளங்குகின்றன. கருப்பு, வெள்ளை, நீலம் மற்றும் பல வண்ணங்களிலும் 24 மீட்டர் நீளம் முதல் 1.25 மீட்டருக்குக் குறைவான நீளம் வரையும் உப்பு நீர் மற்றும் நன்னீரிலும் வாழக்கூடியதாகவும் உலகில் உள்ள எல்லா கடல்களிலும் மற்றும் சில வகைகள் அமேசான், சீனாவின் மிகப் பெரிய ஆறான யாங்ட்ஜிலும் மற்றும் இந்தியாவின் கங்கை ஆற்றிலும் வாழக்கூடியதாகவும் காணப்படுகின்றன. 10 முதல் 16 மாத கால அளவில் வித்தியாசமான கர்ப்ப காலங்களை உள்ளடக்கியதாகவும் விளங்குகின்றது. டால்பின் புரொபோசிஸ் போன்றவைகள் உட்பட திமிங்கிலம் இனத்தை சேர்ந்தவையாகும். கீழ் காணும் படம் அமேசான் ஆற்றில் வாழும் Pink டால்பின் ஆகும்.



விஞ்ஞானிகள் திமிங்கிலங்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றார்கள். ஒன்று பற்கள் உள்ளவை. வாயின் இரு புறங்களிலும் வலிமையான தாடைகளுடன் கூடிய பற்களுடையவை. மற்றது பற்கள் அற்றவை அல்லது baleen என்ற அமைப்பைப் பெற்ற baleen திமிங்கிலங்கள். பற்கள் உள்ள வகைகளில் Sperm whale, Beaked, Narwhals, Beluga, Dolphin மற்றும் Porpoises போன்ற வகைகளும் பற்கள் அற்றவைகளில் Rorquals, Gray whales, Right whales என்ற மூன்று வகைகளும் இருக்கின்றன.

## பற்களுடைய திமிங்கில வகைகள்

பற்கள் உள்ள வகைகளில் 1.5 மீட்டருக்கு குறைவான Horbor porpoise முதல் 18 மீட்டர் நீளமும் 55 டன் எடையுடைய Sperm whale வரை பல வகைகள் இருக்கின்றன. இதில் பல வியக்கத்தக்க சிறப்பம்சங்களுடன் விளங்கும் Sperm whale பற்றிப் பார்ப்போம்.

Sperm whale வலிமையான பற்களைக் கொண்ட திமிங்கிலங்களில் முதன்மையான இடத்தை வகிக்கும் வகையைச் சேர்ந்ததாகும். இவை இத்தகைய பற்கள் அமைப்பை பெற்று விளங்குவதனால் மிகப் பெரிய அளவிலான மீன்களைக் கூட ஒரே நேரத்தில் பிடித்து விழுங்க முடிகின்றது. இவை தங்களின் முக்கிய உணவாக உட்கொள்ளும் Gaint squid என்னும் மீன் இனத்தின் நீளம் 10 மீட்டர் என்று சொன்னால் இவற்றின் வாயின் அளவையும் பற்களின் வல்லமையையும் நம்மால் உணர முடிகின்றது.

இவை ஒரு முறை சுவாசித்ததின் பின்னர் 80 நிமிடங்கள் வரை தண்ணீரின் அடியில் இவைகளினால் தாக்குப் பிடிக்க இயலுகின்றது. இவற்றின் உடல் அளவிடற்கறிய கடல் நீரின் அழுத்தத்தை தாங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இவை தங்கள் இரையைத் தேடி கடலின் ஆழத்திற்கு

செல்லும் தூரம் எந்த பாலூட்டிகளினாலும் அடைய முடியாத ஓர் இலக்காகும். 1000 மீட்டர் (1 கிலோ மீட்டர்) முதல் 2000 மீட்டர் (இரண்டு கிலோ மீட்டர்) ஆழம் வரை செல்லக் கூடிய ஆற்றல் பெற்றது. சுபஹானல்லாஹ். இவ்வளவு ஆழக் கடலின் வெளிச்சம் அறவே இல்லாத அடர்ந்த இருளில் இரையை பிடிக்க பயன்படுத்தும் உத்தி எதிரொலி (echo location) மூலம் இரையின் இருப்பிடத்தை துல்லியமாக அறிந்துக் கொள்ளும் முறையாகும். இவைகள் சராசரியாக ஒரு நாளைக்கு 1500 கிலோ வரை உணவை உட்கொள்ளுகினன்றன. இதன் முக்கிய உணவான 10 மீட்டர் நீளமுள்ள Gaint squid பிடித்து உண்ணும் போது சில சமயம் இவைகளுக்கிடையே சண்டை ஏற்பட்டு Sperm Whale உடலில் மிக ஆழமான வெட்டுக் காயத்தை ஏற்படுத்தி விடுகின்றன. இருப்பினும் கூட முடிவில் அவற்றை கபளீகரம் செய்ய இவை தவறுவதில்லை. இவை தங்களின் உணவைப் பிடித்து உண்டதின் பின்னர் தண்ணீரின் மேற்பரப்பிற்கு வந்து 10 முதல் 15 நிமிடங்கள் வரை காற்றை நன்கு சுவாசித்து ஆக்ஸிஜனை சேமித்து மீண்டும் ஆழ் கடலை நோக்கி தங்கள் பயணத்தை தொடர்கின்றன.

## Sperm Whale

மனிதனின் மூளையைக் காட்டிலும் அளவின் எடையில் பெரிய மூளையுடைய பாலூட்டிகள் இரண்டே இரண்டுதான். ஒன்று யானை மற்றது திமிங்கிலத்தினுடைய மூளையாகும். உலகில் உள்ள பாலூட்டிகளில் (அல்லது உயிரினங்களில்) மிகப் பெரிய மூளையுடையது என்ற சிறப்பும் இதற்கு உண்டு. திமிங்கில வகைகளில் மிக அதிக கர்ப்பக் காலமான 16 மாத கர்ப்ப காலம் இதனுடையதாகும். இவை 60 முதல் 70 வருடம் உயிர் வாழக்கூடியது.

## பற்கள் அற்ற Baleen திமிங்கிலங்கள்

பற்கள் உள்ள திமிங்கிலங்களுக்கும் பற்கள் அற்ற பலீன் திமிங்கிலங்களுக்கும் இரையை பிடிக்கப் பயன்படுத்தும் முறையில் மிக பெரிய அளவிலான வித்தியாசங்கள் உள்ளன. Baleen திமிங்கிலங்களின் வாயின் மேற்பரப்பில் தொங்கக்கூடிய அமைப்பில் அமைந்த உறுதியான நீண்ட சீப்புக்களைப் போன்ற வளைந்துக் கொடுக்கக் கூடிய தன்மையைக் கொண்ட இதுதான் பலீன் என்று அழைக்கப்படுகின்றது. Green land Right whale என்றழைக்கப்படும் ஆர்டிக் திமிங்கிலங்களின் பலீன் தகடுகள் அதிக பட்சமாக நான்கு மீட்டர் நீளம் வரை வளரக் கூடியது. இவைகள் பக்கத்திற்கு 270 முதல் 360 எண்ணிக்கை வரையும் வளரக்கூடியது. பலீன் திமிங்கிலங்கள் தங்கள் வாய்களில் உட்கொள்ளும் டன் கணக்கான தண்ணீரை திரும்பப் பீய்ச்சி வெளியேற்றுவதன் மூலம் இந்த பலீன் தகடுகளினால் வடிகட்டப் பட்டுச் சிக்கிக் கொள்ளும் சிறிய பிளாங்டன் மற்றும் சிறிய வகை மீன்களை உணவாக உட்கொள்கின்றன. இந்த பலீன்கள் முக்கோண வடிவில் அமைந்துள்ளன. வாயின் உட்புறத்தில் அமைந்த இவைகளின் வெளிப்புறம் நேரானதாகவும் அதன் உட்புறம் இருப்புறங்களிலும் தேய்ந்த அமைப்பிலும் அமைந்துள்ளதால் மிகச் சிறிய அளவிலான உயிரினங்கள் கூட இவற்றின் வாயிலிருந்து தப்பிக்க இயலுவதில்லை. (முதலை வாயில் மாட்டுவதை விட இதன் வாயில் மாட்டுவது ஆபத்து போலும்).

இன்ஷா அல்லாஹ் தொடர்ச்சி அடுத்த இதழில்

---

***ஒளி படைத்த கண்ணினாய்... முதல் பக்கத் தொடர்ச்சி...***

தொடர்பைப் பார்ப்போம். வயிற்றில் ஏற்படும் பாதிப்புகளால் கண்ணழற்சி நோய், விழி வெண்படலத்தில் சிவப்பேறிய இரத்த நாளங்கள் தெரிதல், கண்ணிலிருந்து வெண்ணிற கழிவுகள் அதிகம் வெளியேறுதல், கண்ணில் நீர் வடிதல், கிட்டப் பார்வை நரம்பு இளைத்து சுருங்குதல், கீழ் இமை துடித்தல் போன்ற நோய்கள் உருவாகின்றன. இவைகளை சரியாக நிரந்தரமாக சரி செய்ய வேண்டுமானால் வயிற்றின் சக்தி ஓட்ட பாதையில் சிகிச்சை அளிக்க வேண்டும். அதை விட்டு விட்டு காரணம் தெரியாமல் கண்ணை தோண்டிக் கொண்டிருப்பதும் அதில் மருந்துகளை அள்ளிக் கொட்டுவதும் அறிவுக்கு அப்பாற்பட்டது என்பதை நீங்களே முடிவு செய்துக் கொள்ளுங்கள்.

உங்களுடைய இரண்டு கண்களையும் மூடி லேசாக சிறிது நேரம் கசக்குங்கள், பிறகு கண்களை திறந்து பாருங்கள். உங்களுக்கு இப்போது நட்சத்திரங்கள் பறப்பது போன்றும் மின் மினி பூச்சிகள் பறப்பது போன்றும் தெரிந்தால் உங்கள் கண்கள் பெருங்குடலால் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு பெருங்குடலை சரி செய்ய வேண்டுமே ஒழிய கண்களை அல்ல! கண் சிகிச்சைக்கு பூரணமாக பெருங்குடலின் (LARGE INTESTINE) இயக்கமும் சரி செய்யப்பட வேண்டும்.

சிறிது வெளிச்சத்தைப் பார்த்தாலும் கண் கூசுகின்றதா? வெயிலில் வெளியில் பார்க்க மிகவும் சிரமப்படுகின்றீர்களா? கண்ணில் எரிச்சலுடன் நீர் வடிகின்றதா? அப்படியானால் சரி செய்யப்பட வேண்டியது பித்தப் பையையே அல்லாது (GALL BLADER) கண்களை அல்ல.

கிட்டப் பார்வை, தூரப் பார்வை, கண்ணில் அரிப்பு, நீர் வடிதல், சிவந்து போதல் இவைகளை சரி செய்ய நாம் சரி செய்ய வேண்டியது சிறுநீர் பையின் (URINARY BLADER) பாதையை கண்களை அல்ல.

இவ்வாறு உறுப்புக்கள் ஒவ்வொன்றும் கண்ணோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. இந்த உறுப்புக்களில் ஏற்படும் இயக்க நிலை மாறுபாடுகள் தான் கண்களில் நோயாக பிரதிபலிக்கின்றன.

கண்களில் நமக்கு ஏற்படும் பாதிப்புகள் நோயல்ல. உறுப்புகளில் ஏற்படும் நோயின் பிரதிபலிப்புகள் தான். நோயின் மூலம் உடல் உறுப்புகளில் (வயிறு, பித்தப்பை, சிறுநீர் பை, பெருங்குடல்) தான் பதுங்கியும் தேங்கியும் கிடக்கின்றன. எனவே கண் நோய்களுக்கு மூல காரணம் கண்கள் கிடையாது.

கண்களை ஒளி படைத்த கண்ணாக மாற்றி அமைக்க நாம் கருத்தில் கொண்டு இயக்க குறைவை சரி செய்ய வேண்டிய உறுப்புகள் வயிறு (STOMACH), பித்தப்பை (GALL BLADER), சிறுநீர்பை (URINARY BLADER), பெருங்குடல் (LARGE INTESTINE), இவ்வாறு சிகிச்சை அளிப்போமேயானால் நாம் பகலில் நட்சத்திரத்தைப் பார்க்கும் கண்களைக் கொண்டவர்களாக உருவாக முடியும் இன்ஷா அல்லாஹ். இன்று சீனாவில் கண்ணாடி அணிந்தவர்கள் மிக மிக சொற்பமே. அதற்கு காரணம் அவர்கள் பெறும் தெளிவான சிகிச்சையே. தெளிவான முறையான சிகிச்சையின் மூலமே நாம் அழகான கண்களை பாதுகாக்க முடியும், இல்லை என்றால் ஊமை விழிகளாக உருமாறிவிடும்.

அக்குபஞ்சர் மருத்துவம் மேற்கண்ட சிறப்பான முறையில் செயல்படுவதால் தான் 5000 வருடங்களுக்கும் மேலாக கண் நோய்களை மட்டுமல்ல எல்லா நோய்களையும் வேரிலிருந்து களைந்து பூரண ஆரோக்கியத்தை மனித குலத்திற்கு வழங்கி வருகின்றது.

# பரிந்துரை யாருக்கு..? (தொடர் – 3)

*நெல்லை இப்னு கலாம் ரசூல்*

சுவனத்திற்கு கையைப் பிடித்து அழைத்துச் செல்பவர்கள் அவ்லியாக்கள், நாதாக்கள், இமாம்கள், பெரியார்கள் என்று அர்த்தமில்லாமலும் ஆதாரமில்லாமலும் சொல்பவர்களுக்கு பரிந்துரை பெறுவதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன? என்பதை குர்ஆன் ஹதீஸ் ஒளியில் அலசுவோம். உத்தம திருநபி (ஸல்) அவர்கள் இளமையிலேயே தந்தை-தாயை இழந்து பாட்டனாரின் பரிவு பாசத்தில் வளர்ந்த காலமோ மிகமிக குறைவு. பாட்டனாரின் மறைவுக்குப்பின் நபி (ஸல்) அவர்களை எடுத்து வளர்த்து அன்பைச் சொரிந்தவர் பெரிய தந்தை அபுதாலிப் அவர்கள். சிறு வயதில் நபி (ஸல்) அவர்களை சிரியாவுக்கு அழைத்துச் சென்று வாணிபத்துடன் உள்ள தொடர்பைக் கற்றுக் கொடுத்த ஆரம்ப ஆசான்.

ஏகத்துவப் பிரச்சாரத்துக்கு ஈடு கொடுக்க முடியாத குறைஷிய கொடுமையாளர்கள் அபுதாலிபிடம் நபிகளாரை அடக்கி வையுங்கள் என்று அன்புடன் சொல்லிப் பார்த்தனர், குலம் கோத்திரம் போன்ற பெருமைகளைச் சொல்லி மிரட்டியும் பார்த்தனர். ஒரு கையில் சந்திரனையும் மறு கையில் சூரியனைக் கொடுத்தாலும், தான் கொண்ட கொள்கையில் மாறாத உறுதியுடன் திகழ்ந்த நபிகளாரை சமூகப்பகிஸ்காரம் என்னும் ஊர் நீக்க உத்தரவைக் கொண்டு குறைஷிய கொடுமையாளர்கள் துன்புறுத்திய போதும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அந்த நேரத்திலும் அன்புடன் அரவணைத்து ஆதரவு நல்கியவர் அபுதாலிப் ஆவார்.

> **இணைவைப்பையே பழக்கமாகக் கொண்டிருக்கும் எம் சமுதாய அறியாத மக்களுக்கு யார் எடுத்துச்சொல்வது? குர்ஆன் ஹதீஸைப் பேசுகிறோம் என்று சொல்லக்கூடிய நாமும் பிறரை விமர்சிக்க எடுத்துக்கொள்ளும் எள்முனை அக்கறையை இவ்விஷயத்தில் செலுத்தினால் வழிகேட்டில் செல்லும் மக்களைத் தடுத்து நன்மையை ஏவித் தீமையைத் தடுத்த பாக்கியம் பெற்றவராவோம்.**

மொத்தத்தில் ஏகத்துவப் பிரச்சாரம் முடங்கி விடாமல் முழு மூச்சுடன் நடக்க மிகவும் ஒத்துழைப்பு நல்கியவர் அபுதாலிப். நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தை அபுதாலிப் நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையிலிருக்கும் போது உத்தம திருநபி (ஸல்) அவர்கள் தமது பெரிய தந்தையார் ஈமான் கொண்டு ஈடேற்றம் பெற்று சுவன வாழ்வை சுவைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவரை அணுகியதை விளக்கும் நபிமொழியைப் பாருங்கள்.

நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தை அபூ தாலிபுக்கு மரணவேளை வந்தபோது அவரருகில் அபூ ஜஹ்லும், அப்துல்லாஹ் இப்னு அபீ உமய்யாவும் இருக்க, நபி (ஸல்) அவர்கள் வந்து, என் பெரிய தந்தையே! **“லாஇலாஹ இல்லல்லாஹ்”** (வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை) என்று சொல்லுங்கள். நான் அல்லாஹ்விடம் தங்களுக்காக வாதாடுவேன் என்று கூறினார்கள்.

அப்போது அபூ ஜஹ்லும், அப்துல்லாஹ் இப்னு உமய்யாவும், அபூ தாலிபே! (உங்கள் தகப்பனார்) அப்துல் முத்தலிப் அவர்களின் மார்க்கத்தையா நீங்கள் வெறுத்து ஒதுக்கப்போகிறீர்கள்? என்று கேட்டனர். நபி (ஸல்) அவர்கள், (பெரிய தந்தையே!) உங்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரக்கூடாது என்று இறைவனால் எனக்குத் தடை விதிக்கப்படும்வரை நான் (உங்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரிக்கொண்டிருப்பேன் என்று கூறினார்கள். அப்போதுதான், **“இறைவனுக்கு இணைவைப்பவர்கள் நரகவாசிகள் தாம் என்பது நன்கு தெளிவாகிவிட்ட பின்னரும் - அவர்கள் நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் அவர்களுக்காக பாவமன்னிப்புக் கோரிப் பிரார்த்திப்பதற்கு நபிக்கும், நம்பிக்கையாளர்களுக்கும் உரிமையில்லை”** எனும் (திருக்குர்ஆன் 9:113 வது) இறைவசனம் அருளப்பட்டது. ஸஹீஹ் புகாரி 4675, அறிவிப்பாளர்: முஸய்யப் இப்னு ஹஸன் (ரலி).

இணைவைக்கும் எவருக்கும் பாவமன்னிப்போ பரிகாரமோயில்லை என்பதை உறுதியாக விளக்குகிறது மேற்கூறிய ஹதீஸ். படைத்த இறைவனின் பரோபகாரம், பரிவு கிட்டாது என்பது ஒருபுறமிருக்க இணைவைப்பவருக்குப் பாவ மன்னிப்பு கோருவதைக்கூட தடை செய்கிறான் படைத்த வல்லோன். அபுதாலிப் சம்மந்தமான மற்றொரு நபிமொழியைப் பாருங்கள். அப்பாஸ் இப்னு அப்தில் முத்தலிப் (ரலி) அறிவித்தார்கள் நான், இறைத்தூதர் அவர்களே! அபூதாலிப் அவர்களுக்கு ஏதேனும் (பிரதி) உபகாரம் செய்தீர்களா? ஏனெனில், தங்களை அவர் பாதுகாப்பவராகவும் தங்களுக்காக (தங்கள் எதிரிகளின் மீது) கோபப்படுபவராகவும் இருந்தாரே! என்று கேட்டேன், நபி (ஸல்) அவர்கள், ஆம் அவர் இப்போது (கணுக்கால் வரை தீண்டும்) சிறிதளவு நரக நெருப்பிலேயே உள்ளார். நான் இல்லையானால் அவர் நரகின் அடித்தளத்திற்குச் சென்றிருப்பார் என்று கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி - 6208)

மற்றொரு நபிமொழியை அபூ ஸயீத் அல்குத்ரி (ரலி) அறிவிக்கிறார்கள், நபி (ஸல்) அவர்களிடம் அவர்களின் பெரிய தந்தை அபூ தாலிப் அவர்களைப் பற்றிக் கூறப்பட்டது. அப்போது அவர்கள், அவருக்கு என் பரிந்துரை மறுமை நாளில் பயனளிக்கக் கூடும் (அதனால்) நரக நெருப்பு அவரின் (முழு உடலையும் தீண்டாமல்) கணுக்கால்கள் வரை மட்டுமே தீண்டும்படி ஆக்கப்படலாம். (ஆனால்) அதனால் அவரின் மூளையின் மூலப்பகுதி (தகித்துக்) கொதிக்கும் என்று சொல்ல நான் கேட்டேன். (ஸஹீஹ் புகாரி - 6564).

நபி (ஸல்) அவர்களின் பரிந்துரைக்குப் பின்னரும் கூட அபுதாலிப் தண்டிக்கப்பட்ட செய்தியை மேற்கூறிய இரு ஹதீஸ்களும் தெரிவிக்கின்றன. இணைவைப்பின் நிழல் பட்டுவிட்டால் பரிந்துரை கிட்டாது என்பது ஒருபுறமிருக்கட்டும் பாவமன்னிப்பு கேட்பதைகூட அல்லாஹ் ஹராமாக ஆக்கிவிட்டான், **இப்படியிருக்க இணைவைப்பையே பழக்கமாகக் கொண்டிருக்கும் எம் சமுதாய அறியாத மக்களுக்கு யார் எடுத்துச்சொல்வது? குர்ஆன் ஹதீஸைப் பேசுகிறோம் என்று சொல்லக்கூடிய நாமும் பிறரை விமர்சிக்க எடுத்துக்கொள்ளும் எள்முனை அக்கறையை இவ்விஷயத்தில் செலுத்தினால் வழிகேட்டில் செல்லும் மக்களைத் தடுத்து நன்மையை ஏவித் தீமையைத் தடுத்த பாக்கியம் பெற்றவராவோம்.**

அல்லாஹ்வின் அனுமதியின்றி ஆதாரமில்லாமல் இன்னாரின் பரிந்துரையால் நான் சுவனம் போவேன் என்ற வாதத்தை எவராலும் வைக்கமுடியாது, ஏனென்றால் உத்தம திரு நபி (ஸல்) அவர்களைக் காட்டிலும் உயரிய தன்மைகள் இந்த அவ்லியாக்களுக்கு இருப்பதாக உசுப்பி விடுவார்கள் சிலர்.

நபிகளாரின் தாய்-தந்தை பற்றிய சில நபிமொழிகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வோம். ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் என் தந்தை எங்கே? என்று வினவ "நரகில்" என நபி (ஸல்) அவர்கள் பதிலளிக்க நிராசையுடன் திரும்பிய அவரை அழைத்து நபி (ஸல்) அவர்கள் "நிச்சயமாக என் தந்தையும் நரகில்தான்" என்று கூறினார்கள். (முஸ்லீம் - 398).

மற்றொரு நபிமொழியில் நபி (ஸல்) அவர்கள் "என் தாயின் அடக்கஸ்தலத்திற்கு சென்று கண்டுவிட்டு அவருக்கு பாவமன்னிப்பு கோர அல்லாஹ்விடம் அனுமதி கோரினேன், அல்லாஹ் என் தாயின் மண்ணறையைச் சென்று காண மட்டும் இசைவு தந்துவிட்டு அவருக்கு பாவமன்னிப்பு கேட்க தடை விதித்து விட்டான்" எனக் கூறினார்கள்.

உத்தம திரு நபி (ஸல்) அவர்கள் தம் உம்மத்தாருக்கெல்லாம் பரிந்துரை செய்தாலும் தன் தாய், தந்தை, பெரியதந்தை விஷயத்தில் படைத்தவனின் அனுமதியை நாட வேண்டிய நிலையிலிருப்பதையும் பரிந்துரை செய்யத் அவனின் அனுமதி தேவை என்பதுடன் இணைவைப்போர்க்காக செய்யும் பரிந்துரை விழலுக்கிறைத்த நீராகும் போன்ற உண்மைகள் இதுவரை தந்த ஆதாரங்களில் கண்டோம், இனி பரிந்துரை யாருக்கு என்று பார்ப்போம்?.

## நபி (ஸல்) அவர்களின் பரிந்துரை யாருக்கு?

சுவனத்தின் சுவையை நுகர என்றென்றும் நிலைத்து மரணமற்ற நித்திய சுக வாழ்வையடைய படைத்தவனின் அருளும் கருணையும் பெற்ற உத்தம திருநபி (ஸல்) அவர்களின் பரிந்துரையைப் பெற ஈமான் கொண்ட விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும்?. குர்ஆன் ஹதீஸ் ஒளியில் ஆராய்ந்தால் அதற்குரிய பதில் கிடைக்கிறது.

வல்ல அல்லாஹ் அருள்மறையில் ***எவர்கள் (இம்மார்க்கத்தை) நிராகரித்தும், அல்லாஹ்வின் பாதையை விட்டும் (மனிதர்களைத்) தடுத்தும் கொண்டிருந்தார்களோ, அவர்களுடைய செயல்களை (அல்லாஹ்) பயனில்லாமல் ஆக்கிவிட்டான் ஆனால், எவர்கள் ஈமான் கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, முஹம்மது மீது இறக்கி அருளப்பட்ட (வேதத்)தின் மீது - இது அவர்களுடைய இறைவனிடமிருந்து (வந்து)ள்ள உண்மையாக இருக்கிறது என்று நம்பிக்கை கொள்கிறார்களோ, அவர்களுடைய தீமைகளை அவர்களை விட்டும் போக்கி, அவர்களுடைய நிலையையும் சீராக்குகின்றான்.*** (அல்குர்ஆன் 47:1-2).

ஆக ஈமான் கொண்ட விசுவாசி ஆற்ற வேண்டிய பணி எப்படி இருந்தால் என்ன பலன் என்பதை இறைவன் இரத்தினச் சுருக்கமாக கூறியதைக் கண்டோம். இனி இறைவிசுவாசியின் இலக்கணத்தை மற்றொரு அருள்மறை வசனம் கூறுவதைப் பார்ப்போம்.

**முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகவே இருக்கின்றார்கள் அவருடன் இருப்பவர்கள், கா∴பிர்களிடம் கண்டிப்பானவர்கள், தங்களுக்கிடையில் இரக்கமிக்கவர்களாகவும் ருகூ∴ செய்பவர்களாகவும், ஸுஜூது செய்பவர்களாகவும் அல்லாஹ்விடமிருந்து (அவன்) அருளையும் (அவனுடைய) திருப் பொருத்தத்தையும் விரும்பி வேண்டுபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர் அவர்களுடைய அடையாளமாவது அவர்களுடைய முகங்களில் (நெற்றியில்) ஸுஜூதுடைய அடையாளமிருக்கும் இதுவே தவ்றாத்திலுள்ள அவர்களின் உதாரணமாகும், இன்ஜீலிலுள்ள அவர்களது உதாரணமாவது ஒரு பயிரைப் போன்றது அது தன் முளையைக் கிளப்பி(ய பின்) அதை பலப்படுத்துகிறது பின்னர் அது பருத்துக் கனமாகி, பிறகு விவசாயிகளை மகிழ்வடையச் செய்யும் விதத்தில், அது தன் அடித்தண்டின் மீது நிமிர்ந்து செவ்வையாக நிற்கிறது இவற்றைக் கொண்டு நிராகரிப்பவர்களை அவன் கோப மூட்டுகிறான் - ஆனால் அவர்களில் எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான நற்கூலியையும் வாக்களிக்கின்றான்.** (அல்குர்ஆன் 48:29).

ஒரு இறை விசுவாசியின் தன்மை, அவனின் செயல்கள், அவனின் இலக்கணம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற நியதியை நிர்ணயித்த இறைவன் விசுவாசிகளுக்கு கூலியாக சுவனத்தை தருவதுடன் நிராகரிப்போர் (அவனின் மேற்கூறிய இலக்கணங்களுக்கு மாறாகச்) செய்யும் அமல்களை அங்கீகரிக்காமல் அவர்களை கோபமூமட்டுவதை மேற்கூறிய அருள்மறை வசனம் விளக்குகிறது.

மறுமையில் பாவ மன்னிப்பே கிடைக்காத இணைவைப்பைத் தவிர்ந்து கொள்ள இறைவன் கூறும் மற்றொரு விளக்கத்தைப் பாருங்கள். **இப்ராஹீமிடமும், அவரோடு இருந்தவர்களிடமும், நிச்சயமாக உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது தம் சமூகத்தாரிடம் அவர்கள், உங்களை விட்டும், இன்னும் அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குகிறவற்றை விட்டும், நாங்கள் நிச்சயமாக நீங்கிக் கொண்டோம் உங்களையும் நாங்கள் நிராகரித்து விட்டோம் அன்றியும் ஏகனான அல்லாஹ் ஒருவன் மீதே நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரை, நமக்கும் உங்களுக்குமிடையில் பகைமையும், வெறுப்பும் நிரந்தரமாக ஏற்பட்டு விட்டன என்றார்கள். (ஆனால்) இப்ராஹீம் தம் தந்தையை நோக்கி அல்லாஹ்விடத்தில் உங்களுக்காக (அவனுடைய வேதனையிலிருந்து) எதையும் தடுக்க எனக்குச் சக்தி கிடையாது ஆயினும் உங்களுக்காக நான் அவனிடத்தில் நிச்சயமாக மன்னிப்புத் தேடுவேன் எனக் கூறியதைத் தவிர (மற்ற எல்லாவற்றிலும் முன் மாதிரியிருக்கிறது, அன்றியும், அவர் கூறினார்) எங்கள் இறைவா! உன்னையே முற்றிலும் சார்ந்திருக்கிறோம் மேலும், உன்னிடமே எங்கள் மீளுதலும் இருக்கிறது.** (அல்குர்ஆன் 60:4)

முன்மாதிரிகளைச் சுட்டிக்காட்டிய அல்லாஹ் முஷ்ரிக் (இணைவைப்பாளர்) தந்தைக்கு பாவ மன்னிப்புத் தேடக்கூறியதைத் தவிர என்று பரிந்துரைக்கு பெற வேண்டிய படிப்பினையை பக்குவமாக நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் வாழ்வு மூலம் நமக்கு கற்றுத்தருகிறான். நபி (ஸல்) அவர்களிடம் பணிவிடை புரிந்த நபித்தோழர் ரபிஆபின் கஹ்ப் (ரலி) அவர்களிடம் உத்தம திருநபி (ஸல்) அவர்கள் நீங்கள் விரும்புவதை என்னிடம் கேளுங்கள் என்று கூற நபித்தோழரோ அல்லாஹ்வின் தூதரே மறுமையிலும் சுவனத்தில் உங்களுடன் இருக்க வேண்டும் என்ற தன்

விருப்பத்தை முன் வைக்கிறார். நபி (ஸல்) அவர்கள் அந்நபித் தோழரை நோக்கி நீர் உமது விருப்பம் நிறைவேற ஸஜ்தாக்களை (சிரம்பணிதலை ந.்.பிலான தொழுகைகளை) அதிகமாக்கி உதவி புரிவீராக என்று கேட்டுக்கொண்ட செய்திகளை ஹதீஸில் காண முடிகிறது. மற்றொரு நபிமொழியில் கலப்பற்ற தூய உள்ளத்துடன் கலிமா ஷஹாதாவை மொழிந்து அதில் உறுதியாய் நிற்பவர் என் பரிந்துரைக்குரியவர் என நபி (ஸல்) அவர்கள் கூறியதையும் பார்க்கிறோம்.

ஸஹீஹ் புகாரியில் இடம்பெறும் நபிமொழியொன்று கூறுவதைப் பாருங்கள். பாங்கு முடிந்த பின் கூறும் துஆ பூரணமான இந்த அழைப்பின் இரட்சகனான அல்லாஹ்வே! நிலையான தொழுகைக்குரியவனே! முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு வஸீலா என்ற அந்தஸ்தையும் சிறப்பையும் வழங்குவாயாக! நீ வாக்களித்தவாறு புகழுக்குரிய இடத்தில் அவர்களை எழுப்புவாயாக! என்ற துஆவை ஓதுகிறவருக்கு மறுமை நாளில் என்னுடைய பரிந்துரை கிடைத்து விடுகிறது என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவித்தார்கள். (புகாரி - 614)

மற்றொரு அறிவிப்பில் இப்னு உமர் (ரலி) அறிவித்தார்கள், மக்கள் மறுமை நாளில் பல குழுக்களாக ஆகிவிடுவார்கள். ஒவ்வொரு சமுதாயத்தினரும் தத்தம் நபியைப் பின்தொடர்ந்து சென்று, இன்னாரே (எங்களுக்காக அல்லாஹ்விடம்) பரிந்துரை செய்யுங்கள் என்று கேட்பார்கள். (ஒவ்வொருவராகத் தம்மால் இயலாதென்று மறுத்துக்கொண்டே வர) இறுதியில் நபி (ஸல்) அவர்களிடம் பரிந்துரை (கோரிக்கை) செல்லும், நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் பரிந்துரைப்பார்கள் நபியவர்களை அல்லாஹ் (மகாமு மஹ்மூத் எனும்) உயர் அந்தஸ்திற்கு அனுப்பும் நாளில் இது நடக்கும், என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(தொழுகை அழைப்பான) பாங்கு சப்தத்தைக் கேட்(டு முடிக்)கும் போது இறைவா! இந்த முழுமையான அழைப்பிற்கும், நிலைநிற்கவிருக்கும் தொழுகைக்கும் அதிபதியே! முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உரித்தான (சுவர்க்கத்தின்) உயரிடத்தையும் தனிச் சிறப்பையும் அன்னாருக்குத் தந்தருள்வாயாக! அவர்களுக்கு நீ வாக்களித்துள்ள உயர் அந்தஸ்திற்கு அவர்களை அனுப்பி வைப்பாயாக! என்று பிரார்த்திக்கிறவருக்கு மறுமை நாளில் என் பரிந்துரை கிடைக்கும், இதை ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவித்தார்கள் (புகாரி - 4718-4719).

பாங்கோசை கேட்டபின் நாம் செய்யும் பிரார்த்தனைக்குரிய மிகப்பெரும் பலனை மேற்கூறிய நபிமொழிகள் நமக்குணர்த்தின. உத்தம திரு நபி (ஸல்) அவர்கள் கியாம நாளின் பயங்கரத்தைப் பற்றி இணைவைக்கும் குறைஷியக் குடும்பத்தாரை எச்சரித்தது எப்படி என்பதை கீழ் காணும் நபிமொழி விளக்குகிறது.

இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார்கள் **(நபியே! உங்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கு எச்சரிக்கை செய்வீராக! (அதாவது,) தூய மனம் படைத்த உம்முடைய குழுவினரையும் (எச்சரிக்கை செய்வீராக!)** எனும் (திருக்குர்ஆன் 26:214 வது) இறைவசனம் அருளப்பட்டபோது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் புறப்பட்டுச் சென்று ஸ.்.பா (மலை) மீதேறி உரத்த குரலில், யா ஸபாஹா (அதிகாலை ஆபத்து! உதவி! உதவி!) என்று கூறினார்கள். அப்போது (மக்கா நகர) மக்கள், யார் இவர்? என்று கூறியவாறு நபியவர்களிடம் ஒன்று கூடினர். அப்போது நபி (ஸல்) அவர்கள், இந்த மலையின் அடிவாரத்திலிருந்து (உங்களைத் தாக்குவதற்காக பகைவர்களின்) குதிரைப் படையொன்று புறப்பட்டு வருகிறது என்று நான் உங்களிடம் தெரிவித்தால், என்னை நீங்கள் நம்புவீர்களா? என்று கேட்டார்கள். மக்கள், உம்மிடமிருந்து எந்தப் பொய்யையும் நாங்கள் அனுபவித்ததில்லை. (அவ்வாறிருக்க, இதை நாங்கள் நம்பாமல் இருப்போமா?) என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள், அப்படியென்றால், கடும் வேதனையொன்று எதிர்நோக்கியுள்ளது என்று உங்களை நான் எச்சரிக்கை செய்கிறேன் என்றார்கள். (அப்போது நபியவர்களைப் பார்த்து) அபூ லஹப், உமக்கு அழிவுண்டாகட்டும்! இதற்காகத்தான் எங்களை ஒன்று கூட்டினாயா? என்று கேட்டான். பின்னர் நபி (ஸல்) அவர்கள் எழுந்தார்கள். அப்போது அழியட்டும் அபூ லஹபின் இரண்டு கரங்கள் அவனுமே அழியட்டும் எனும் (111 வது) அத்தியாயம் அருளப்பெற்றது (புகாரி - 4719).

அல்லாஹ்வும் அவனின் திருத்தூதரும் காட்டித் தந்த வழிமுறையில் வாழ்ந்து ஏவியதைச் செய்து விலக்கியதைத் தவிர்ந்து, மறுமை வாழ்வைச் செம்மைப்படுத்தவே இப்புவியுக வாழ்க்கையை நாம் பயன்படுத்தி நிரந்தர மறுமை வாழ்வின் சிறப்பை உணர்ந்து உத்தம திரு நபி (ஸல்) அவர்களின் பரிந்துரை பெறும் பாக்கியம் பெற்றவர்களாகத் திகழ நம் அமல்களை நாம் ஆக்கிக் கொள்வோமாக. (முற்றும்)

# மறுமையில் அல்லாஹ்வின் சந்திப்பு

நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்பொழுது அவர்கள் வானில் பதினான்காம் பிறையின் (பரிபூரண) நிலவை பார்த்தார்கள். அப்பொழுது கூறினார்கள். நீங்கள் இந்த நிலவைப் பார்ப்பதைப் போல (கியாமத் நாளில்) உங்கள் இறைவனை கண் கூடாகக் காண்பீர்கள். அவனைப் பார்பதில் உங்களுக்கு எந்தக் குழப்பமும் இருக்காது. புகாரி, முஸ்லிம்: ஜரீர் பின் அப்தில்லாஹ் (ரலி)

சுவர்க்கவாசிகள் சுவர்க்கத்தில் நுழைந்ததும், அல்லாஹு தபாரக வதஆலா, அவர்களிடம் வேறு எதனையும் நீங்கள் நாடுகிறீர்களா? அதனை நான் உங்களுக்கு அதிகப் படுத்துகிறேன். என்று கூறுவான். அதற்கவர்கள், எங்கள் இரட்சகனே! நீ எங்களின் முகங்களை வெண்மையாக்கி விட்டாய். எங்களை சுவர்க்கத்தில் நுழையச் செய்து விட்டாய். நரகை விட்டும் எங்களைக் காப்பாற்றி விட்டாய். (நீ எங்களுக்கு எல்லா விதமான அருட்கொடைகளையும், இன்பங்களையும், அளித்து விட்டாய்! இனி எங்களுக்கு வேறு என்ன வேண்டும்) என்பார்கள். அப்பொழுது அல்லாஹ் தனக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள திரையை அகற்றி விடுவான். (அப்பொழுது அவர்கள் தங்கள் இரட்சகனைப் பார்க்கும் பாக்கியத்தை பெறுவார்கள்) தங்கள் இரட்சகனைப் பார்ப்பதை விட வேறு எந்தப் பொருளும் அவர்களுக்குப் பிரியமானதாகக் கொடுக்கப்படவில்லை. (அவர்களது இரடசகனைப் பார்ப்பதே எல்லாவற்றையும் விட அவர்களுக்கு மிகப் பிரியமானதாக இருக்கும்) முஸ்லிம்: ஸுஹைபு (ரலி)

நம் அனைவருக்கும் அல்லாஹ்வை சந்திக்கும் பாக்கியத்தை வல்ல இறைவன் அருள்புரிவானாக!

# குறுக்கெழுத்துப் போட்டி-7



**இடமிருந்து வலம்**

1. தொழுகையில் அல்ஹம்து சூரா ஓதிய பின் இதை கூற வேண்டும். (3)
6. இறைவனிடம் ஆலோசனை கேட்கும் தொழுகை. (5)
8. ரமளானில் பத்து நாட்கள் பள்ளியில் தங்குவது. (5)
9. இது வலியுறுத்தப்பட்ட சுன்னத். இதை வளர விட வேண்டும். (2)
14. ஒவ்வொரு ஆத்மாவும் இதை சுவைத்தே தீரும். (4)

**வலமிருந்து இடம்**

2. இந்த பானத்தில் நோய் நிவாரணம் இருக்கிறது. (2)
3. சிறு மரணம் (4)
5. ஹுதைபியா உடன்படிக்கை ஏற்பட்ட அரபி மாதம். (5)
8. மழைக்கு முன்னால் வருவது (அல் குர்ஆனின் 13வது அத்தியாயம்). (2)
13. ருமைஸா என்ற இயற்பெயரைக் கொண்ட நபித்தோழி. (6)

**மேலிருந்து கீழ்**

1. இப்ராஹீம் நபியின் தந்தை பெயர். (3)
3. முத்துக்குளித்தலில் பெயர் பெற்ற தமிழக துறைமுகம். (5)
4. இந்தியாவின் தேசிய மொழி (3)
7. இலங்கையின் தேசிய விளையாட்டு. (5)
11. .............. பத்தும் செய்யும். (3)

**கீழிருந்து மேல்**

6. கணவன் இறந்தால் அல்லது தலாக் செய்தால் பெண்கள் இருப்பது. (3)
8. இந்த கால கட்டத்தில் இது இல்லாமல் பாடல் இல்லை. A.R. ரஹ்மானுடன் தொடர்புடையது. (இஸ்லாம் இதை தடை செய்துள்ளது). (2)
10. மக்காவின் பழைய பெயர். (3)
12. ஸ்டாக்ஹோம் ஐ தலைநகராக கொண்ட நாடு. (4)
13. ஹம்ஸா (ரலி) ஷஹீதான யுத்தத்தின் பெயர். (3)

## விதிமுறைகள்

1. விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர் Mr.Ibrahim(Madani), Tamil Division, P.O.Box-32628, Jeddah-21438 அல்லது suvanam@gmail.com என்கிற முகவரிக்கு ஜமாதுல் ஆகிர் மாதம் 30ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

2. விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை எழுதி அனுப்பவேண்டும்.

3. நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி அல்லது தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

4. ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

5. பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

6. ஆசிரியர் முடிவே இறுதியானது

## குறுக்கெழுத்துப் போட்டி - 5 க்கான பரிசு பெறுபவர் விபரம்

குறுக்கெழுத்துப் போட்டி - 5 க்கான சரியான பதில்களை பலரும் எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிசு பெறுபவர்...

**A.H. அப்துல் லத்தீ்ஃப் (Fine H. P. Co. Ltd.)**

குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.

### குறுக்கெழுத்துப் போட்டி - 5 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஹி | 2 ரோ | சி | மா | நா | க | 3 சா | கி |
| தா | ம் | 4 தொ | ழு | கை | | வி | 5 டீ |
| ய | | யா | 6 பி | தை | 7 ஹு | | மோ |
| த் | 8 ஹ | 9 இ | ஸ் | ரே | ல் | | ர |
| | கி | க் | 10 மி | | பு | ப் | 11 தி |
| டி | | 12 ச | ல் | வா | | 13 போ | ந் |
| ட் | | | லா | ட் | | | ரே |
| 14 வ | ரி | 15 ப் | ஹ் | 16 ரை | ன் | | 17 ந |